கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 62/2020

வாதி தரப்பு சாட்சி – 1 வேல்முருகன் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 01.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. 2 ம் வாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை. எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். 2 ம் வாதி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எனது சொத்தை தாவா அ அட்டவணை சொத்தாகவும், 2 ம் வாதியின் சொத்தை தாவா ஆ அட்டவனை சொத்தாகவும் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அ பட்டியல் சொத்து நான் ஒரு தேதியிலும், ஆ பட்டியல் 2 ம் வாதி வேறொரு தேதியிலும் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். அ பட்டியல் சொத்தை யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் கிருஷ்ணகுமார் என்பவரிடமிருநது கிரையம் பெற்றேன். கிருஷ்ணகுமாருக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அவரின் தாயார் பானுமதி அவருக்கு ஆவணம் எழுதி கொடுத்ததின் படி கிடைக்கப்பெற்றது.

2. மேற்படி ஆவணம் கிரைய ஆணவமா என்று எனக்கு தெரியவில்லை. எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது கிரைய பத்திரத்தில் கிருஷ்ணகுமாருக்கு எவ்வாறு சொத்து பாத்தியப்பட்டது என்று வாசகம் உள்ளதா என்றால் உள்ளது. எனது வழக்குரையில் கிருஷ்ணகுமாருக்கு அவரது தாயார் பானுமதி 19.10.2007 ம் தேதி பதிவுசெய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை எனக்கு கிரையம் செய்த போது மூல ஆவணமாக கொடுத்தாரா என்றால் கொடுத்தார். அது என் வசம் தான் உள்ளது.

3. மேற்படி 19.10.2007 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் பானுமதிக்கு எவ்வாறு அ பட்டியல் சொத்து பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. எந்த வகையில் பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியாக நினைவில்லை.

நான் கிரையம் வாங்கியதற்கு முன்பு வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் கிரையம் வாங்கும் போது பானுமதி பெயரில் உள்ள ஆவணத்தை கேட்டு வாங்கி பார்த்து தான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். ஆனால் தற்போது என்ன ஆவணம் என்று நினைவில்லை. கிரையம் சம்மந்தமாக பேசியது பானுமதி மற்றும் அவரது கணவர் ராமசந்திரன் மட்டும் தான் என்றும், கையெழுத்துபோடும் சமயத்தில் மட்டுமே கிருஷ்ணகுமார் வந்தார் என்றால் சரியல்ல.

4. கிரையம் செய்வதற்கு முன்பிருந்தே மேற்படி அனைவரிடமும் பேசி கொண்டு தான் இருந்தேன். பானுமதி பெயரில் எவ்வளவு அளவுள்ள சொத்துக்கள் இருந்தது என்று ஆவணத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் என்ன ஆவணத்தை பார்வையிட்டேன் என்றால் பானுமதி பெயரில் இருந்த கிரைய பத்திரம் மற்றும் பட்டாவை பார்த்தேன். மேற்படி பானுமதி பெயரில் இருந்த கிரைய பத்திரத்தில் நான் கிரையம் பெற்ற சொத்தின் தென்வடல் மற்றும் கிழமேல் அளவுகள் மற்றும் நான்கு எல்லைகள் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது. பானுமதி பெயரில் இருந்த கிரைய பத்திரத்திரம் மற்றும் பட்டாவையோ, கிருஷ்ணகுமார் பெயரில் உள்ள செட்டில்மென்ட் பத்திரத்தையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என் வசம் உள்ளது.

5. கிருஷ்ணகுமாரின் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டிருந்ததா என்றால் ஏற்பட்டிருந்தது. அதில் உள்ள அளவுகள் தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. கிருஷ்ணகுமார் பெயரில் இருந்த பட்டா என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. எனது கிரைய பத்திரத்தின் அசல் எந்த வங்கியில் உள்ளது என்றால் ரிலையன்ஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் என்ற வங்கியில் உள்ளது. நான் இன்றுவரை மேற்படி கடனை முழுமையாக செலுத்தவில்லை.

**1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**